# யுத்தத்திற்கு பின்னரான வடக்கின் அரசியல் அபிவிருத்தியில் மக்கள் பங்குபற்றுதலின் போக்கு

திருச்செந்தூரன் எஸ்

வடமாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா எனும் ஐந்து நிர்வாக மாவட்டங்களை தன்னகத்தே கொண்ட 8884 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும், 13 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையையும் கொண்ட யுத்தத்தின் காரணமாக வகை தொகையற்ற உடமை அழிவுகளையும் உயிர் அழிவுகளையும் சந்தித்த பிரதேசமாகும். 2009/மே/18 இன் பிற்பாடு இப் பிரதேசத்தவரின் அரசியல், சமூக, பொருளாதார ரீதியான செயற்பாடுகளில் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகிறது. எனினும் இவ் வருடம் இடம்பெற்ற ஜனாதிபதித்தேர்தல், பாராளுமன்றத்தேர்தல் ஆகியவற்றில் மக்கள் உற்சாகத்துடன் வாக்களிப்பில் ஈடுபடவில்லை. தவிர அரசியல் ரீதியான செயற்பாடுகளில் இருந்து மக்கள் விலகி இருக்கின்ற போக்கும் காணப்படுகின்றது. எனவே இத்தளத்தில் இருந்து இப்பிரதேசத்தின் அரசியல் பங்குபற்றுதலின் போக்கினை அளவீடு செய்வது மிக இன்றியமையாததாகும். அரசியற் பங்குபற்றுதல் என்பது ஜனநாயகத்தின் உயிர் மூச்சாக திகழ்கின்றது. பொதுவாக அரசியற் பங்குபற்றுதல் என்பது அதனது உண்மையான ஆழமான அர்த்தத்தில் புரிந்து கொள்ளபடுவதில்லை. இது ஆட்சியாளரை தெரிவு செய்வது என்ற பொதுக் கொள்கையுடன் தொடர்புபட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக இந் நடவடிக்கை பிரதான ஐந்து செயற்பாடுகளை உள்ளடக்கி காணப்படுவதுண்டு.தேர்தலில் வாக்களிப்பு, அமுக்கக் குழுக்களின் அங்கமாக இருந்து செயற்படுதல்,சட்ட சபையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பை ஏற்படுத்துதல், தொடர்பாடல் மூலம் அரசியல் சார்பான கருத்துக்களை மக்களுக்கு கூறுதல், அரசியற் கட்சி நடவடிக்கை களில் பங்குபற்றுதல். வடமாகாணத்தவரின் குறைந்தளவிலான அரசியற்பங்கு பற்றுதலுக்குரிய காரணங்களை அடையாளங்காணல், அரசியற் பங்குபற்றுதலின் அளவை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல். ஆய்வு நுட்பங்களாக தரரீதியான, பண்பு ரீதியான ஆய்வு முறைகள் கையாளப்படுகிறது. முதல் நிலைத் தரவாக வினாக்கொத்து, தேர்தல் செயலக அறிக்கை போன்றனவும், இரண்டாம் நிலைத் தரவுகளாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றில் வெளிவந்த அபிப்பிராயங்கள் உள்வாங்கப்படுகின்றது.

இலங்கையில் சகல மாகாணங்களையும் விட வட மாகாணத்தின் அரசியல் பங்குபற்றுதலே மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுவது வரலாற்றின் துன்பியலாகும் இந் நிலையில் வடமாகாண சமூகத்தை அரசியல் விழிப்புணர்வுடைய ஆரோக்கியமான அரசியல் கலா சாரத்தை கொண்ட சமூகமாகமாற்றிமைப்பதற்குரிய வழிமுறைகள் முன்வைக்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** வடக்கு அபிவிருத்தி, மக்கள் பங்கேற்பு, அரசியற் கட்சிகள்

*அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம். E-mail: thiruchenthoor@gmail.com*